"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,02,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்ற பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவைகளுக்கான விளக்கத்தினை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்

(அ) அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குவதற்கு முன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-இன் கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அகவிலைப்படி வழங்குவது சம்பந்தமாக ஓர் அறிக்கையை அவையிலே வைப்பதற்கு அனுமதி கோரியிருக்கின்றார்கள். அதற்கான அனுமதியைத் தருகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அலுவலர்களுக்கு 1-1-1997 முதல் மைய அரசு அலுவலர்களுக்கு இணையாக அகவிலைப்படி வழங்கப்படும். அதன்படி மாதம் ரூ.3,500 வரை ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 159 விழுக்காடு என்பது

@ 177 முதல் 265 பக்கங்கள் வரை இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 16

170 விழுக்காடு எனவும், மாதம் ரூ.3,500/-க்கு மேல் ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 119 விழுக்காடு என்பது 128 விழுக்காடு எனவும் உயர்த்தி அகவிலைப்படி வழங்கப்படும். இதனால், குறைந்தபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.82/-ஆகவும், அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ. 513/-ஆகவும் இருக்கும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, ஊதியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதிய முறையில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் வருவாய்த் துறையிலே பணிபுரியும் கிராம உதவியாளர்களுக்கும் பொருந்தும்.

அரசு அலுவலர்களின் அகவிலைப்படி, உயர்த்தி வழங்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கு 1-1-1997 முதல் பின்வருமாறு ஊதிய உயர்வு (adhoc increase) வழங்கப்படும்:-

மாதம் ரூ.150/-க்குக் குறைவாக மதிப்பூதியம் அல்லது தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு .. மாதம் ரூ. 10/-

மாதம் ரூ.150/-ம் அதற்கு மேலும் மதிப்பூதியம் அல்லது தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு .. மாதம் ரூ. 20/-

இந்த உயர்வு சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் அலுவலர்கள் உள்ளிட்ட மதிப்பூதியம் மற்றும் தொகுப்பூதியம் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்படும். மேலும், ஊதியக் குழுவின் சம்பள விகிதங்களுக்கு அப்பாற்பட்டு சம்பள ஏற்றமுறையில் உள்ள சத்துணவு அமைப்பாளர்கள் போன்றவர்களுக்கு ஏற்கெனவே 125 விழுக்காடு அகவிலைப்படியும், 23 விழுக்காடு கூடுதல் அகவிலைப்படியும் வழங்கப் பட்டு வருகிறது. அவர்களுக்குக் கூடுதல் அகவிலைப்படி 23-லிருந்து 34 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு சனவரி 1997 முதல் ரொக்கமாக வழங்கப்படும். இதனால் சுமார் 12 இலட்சம் அலுவலர்கள் பயன்பெறுவார்கள்.

அதேபோல், தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மத்திய அரசில் கொடுத்திருப்பதுபோல், மேலும் ஒரு அகவிலைப்படி தவணை 1-1-1997 முதல் வழங்கப்படும்.

அதன்படி ரூ.1,750/- வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 159 விழுக்காடு என்பது 170 விழுக்காடு எனவும், ரூ.1,750/-க்கு மேல் ரூ.3,000/- வரை பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 119 விழுக்காடு என்பது 128 விழுக்காடு எனவும், ரூ.3,000/-க்கு மேல் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 103 விழுக்காடு என்பது 110 விழுக்காடு எனவும் உயர்த்தி அளிக்கப்படும். இதனால், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ.41/-ம், அதிக பட்சம் ரூ.315/-ம் பணப்பயன் அடைவார்கள்.

முற்பகல் 9-40

மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி, தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், உள்ளாட்சி மற்றும் அரசு மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் மாதம் ரூ.150/- கருணைத் தொகை பெறுபவர்கள் உட்பட, எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால், ஏறக்குறைய 2.86 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்தமாக 206.19 கோடி ரூபாயாகவும், நடப்பாண்டில் இச்செலவினம், 274.92 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி-பண்பாடு— தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் — தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று, இந்த இனிப்பான அறிக்கையோடு, இந்த விவாதம் தொடங்குகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களை விவாதத்தைத் துவக்கி வைக்குமாறு அழைக்கிறேன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிப்பான செய்தியோடு இந்த அவை தொடங்குகிறது